சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”
தினசரி புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 170 | 14.12.2025 | SUNDAY | KARTHIGAI : 28 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 170 | 14.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | கார்த்திகை : 28 | விலை : ரூ.5/–

3 டில்லிக்கு புறப்பட்டு சென்றார் தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன்

4 ‘ஈரோட்டில் வரும் 18ல் விஜய் பிரசாரம் உறுதி’ தடையில்லை என்கிறார் செங்கோட்டையன்

2 இந்தியாவுக்கு எதிரான 50 சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும்; அமெரிக்க பார்லியில் தீர்மானம்

# “உங்கள் நலனுக்காக, சத்தீஸ்கர் வளர்ச்சிக்காக...” நக்ஸல்களுக்கு அமித் ஷாவின் வேண்டுகோள்!

ஜக்தால்பூர் (சத்தீஸ்கர்): டிச.14-

உங்கள் நலனுக்காக, உங்கள் குடும்பத்தினர் நலனுக்காக, சத்தீஸ்கரின் நலனுக்காக ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு, வளர்ச்சி அடைந்த சத்தீஸ்கரை உருவாக்குவதற்கான பயணத்தில் இணையுங்கள் என்று நக்ஸல்களுக்கு அமித் ஷா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பஸ்தர் ஒலிம்பிக்ஸ் 2025ன் நிறைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ‘‘அன்னை தண்டேஸ்வரி தேவியிடம் எனக்கு ஒரே ஒரு பிரார்த்தனை மட்டுமே இருக்கிறது. சத்தீஸ்கர் முழுவதும் நக்சலிசத்தில் இருந்து விடுபட வேண்டும்; அனைத்து பழங்குடி மக்களுக்கும் அன்னையின் ஆசீர்வாதம் பூரணமாக கிடைக்க வேண்டும் என்பதே அது.

கடந்த ஆண்டு நடந்த பஸ்தர் ஒலிம்பிக்ஸ் போட்டியின்போதும் நான் வந்திருந்தேன். இந்த ஆண்டும் வந்துள்ளேன். அடுத்த ஆண்டும் வருவேன். அப்போது, முழு நாடும் சிவப்பு பயங்கரவாதத்தில் இருந்து விடுபட்டிருக்கும். நக்ஸல் இல்லாத சத்தீஸ்கர் முன்னேற்றப் பாதையில் பீடு நடை போடும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் பஸ்தரை நாட்டின் மிகவும் வளர்ந்த பழங்குடி பகுதியாக மாற்ற நாங்கள் பாடுபடுவோம்.



இதற்காக, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசும் முதல்வர் விஷ்ணு தியோ சிங் தலைமையிலான மாநில அரசும் தோளோடு தோள் சேர்ந்து செயல்படுகின்றன.

சரணடைந்த நக்ஸல் இளைஞர்களின் ஒரு குழுவும் பஸ்தர் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டுள்ளது. சரணடைந்த 700க்கும் மேற்பட்ட நக்ஸல்களின் குழந்தைகள், சகோதர சகோதரிகள் இந்த விளையாட்டுக்களில் பங்கேற்றதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மார்ச் 31, 2026ல் நமது நாடு நக்ஸலிசத்தில் இருந்து விடுபடும்.

இன்னமும் தவறாக வழிநடத்தப்பட்டு ஆயுதங்ளை கைகளில் வைத்திருக்கும் நக்ஸல்களுக்கு எனது வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் உங்களின் நலனுக்காகவும், உங்களின் குடும்பத்தினரின் நலனுக்காகவும், சத்தீஸ்கரின் நலனுக்காகவும் ஆயுதங்களை கீழே போட வேண்டும். வளர்ச்சி அடைந்த சத்தீஸ்கரை உருவாக்குவதற்கான பயணத்தில் நீங்கள் இணைய வேண்டும்.

7 மாவட்டங்கள் அடங்கிய பஸ்தர் பகுதியில் பால் கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்படும். இந்த மாவட்டங்கள் அதிக பால் உற்பத்தி செய்யும் மாவட்டங்களாக மாறும். பால் பண்ணை மூலம் அவர்களின் வருவாய் அதிகரிக்கும்.

பஸ்தரின் கலாச்சாரம் உலகின் உயர்ந்த கலாச்சாரங்களில் ஒன்று. இங்குள்ள அனைத்து பழங்குடியினரின் பாரம்பரிய உணவு, உடை, கலை, இசைக்கருவிகள், விளையாட்டு ஆகியவை நமது ஒட்டுமொத்த நாட்டுக்கும் வளத்தைச் சேர்க்கும் பாரம்பரியமாகும்.

பஸ்தர் ஒலிம்பிக்2025ன் திறமையான விளையாட்டு வீரர்களை அடையாளம் காண இந்திய விளையாட்டு ஆணையத்தின் குழு வந்துள்ளது. அவர்கள், திறமையாளர்களை அடையாளம் கண்டு வரவிருக்கும் காமன்வெல்த் விளையாட்டு மற்றும் 2036ல் இந்தியாவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இதற்கான ஏற்பாட்டை பிரதமர் மோடி தலைமையிலான அரசு செய்து வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற பஸ்தர் ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு லட்சத்து 50,000 வீரர்கள் பங்கேற்றார்கள். இந்த ஆண்டு 3.91 லட்சம் வீரர்கள் பங்கேற்றுள்ளார்கள். இது இரண்டரை மடங்கு அதிகரிப்பு. இதில், பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஆண்களைவிட பெண்களின் பங்கேற்பு அதிகமாக உள்ளது.” என தெரிவித்தார்.





## அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் பூத் கமிட்டி பாக முகவர் கூட்டம்

அலங்காநல்லூர். டிச.14

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டுகடைதனியார் திருமண மண்டபத்தில் அதிமுக சார்பில் பூத் கமிட்டிபாக முகவர் ஆலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையிலும் நகர செயலாளர் அழகுராஜ் முன்னிலையிலும் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் கலந்துகொண்டு

பேசினார்அவர் பேசியது கடந்த அதிமுக ஆட்சியில் அம்மா குடிநீர் அம்மா சிமெண்ட் அம்மா மினி கிளினிக் கர்ப்பிணி தாய்மார்களுக்கு அம்மா பெட்டகம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை புரட்சித்தலைவி செயல்படுத்தினார் அவரை தொடர்ந்து ஆட்சியை நடத்திய எடப்பாடி பழனிச்சாமி நான்காண்டுகள் எண்ணற்ற திட்டங்களை மக்களுக்கு வழங்கினார் என்று தெரிவித்தார். இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அரியூர் ராதாகிருஷ்ணன், கொரியர் கணேசன், திண்டுக்கல் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் அப்துல்சமது,எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர்கள் ஜெயச்சந்திரமணியன், எம்.எஸ்.சுந்தரம், ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத்,அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர்சுந்தராஜன்,வார்டு செயலாளர்கள் சுந்தரராகவன், கேபிள்பாஸ்கரன், குருளிபாஸ்கரன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் பஞ்சவர்ணம் மாவட்ட விவசாய அணி ஆர்.பி.குமார்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஸ்ரீ சுதாமுருகன், தீபா நந்தினி மயில்வீரன், திருநாவுக்கரசு, வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ராஜ்குமார், வெள்ளைச்சாமி, காசிநாதன், அழகர்சாமி, செந்தூர்பாண்டியன்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி, மகளிரணி துணைச் செயலாளர்கள் சாந்தி, மருதாயிசுந்தர், எம்ஜிஆர் இளைஞர் அணி இணை செயலாளர் செந்தில்குமார், ஊராட்சி செயலர் கார்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி தண்டலை ஆனந்த், செந்தில், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணி 24 இடங்களில் மட்டும்தான் வெற்றிபெறும் : அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

### ஆத்தூர் தொகுதியில் விடுபட்ட மகளிருக்கு உரிமைத் தொகை கிடைப்பது போல் அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட முதியோர்களுக்கு உதவித் தொகை மீண்டும் கிடைக்கும்

சின்னாளபட்டி. டிச.14

2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணி 24 இடங்களில் மட்டும்தான் வெற்றிபெறும் என்று கள்ளநாட்டாண்பட்டியில் நடைபெற்ற புதிய நியாயவிலைக்கடை திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு, ஆத்தூர் தொகுதியில் விடுபட்ட மகளிருக்கு உரிமைத் தொகை கிடைப்பதுபோல் அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட முதியோர்களுக்கு உதவித் தொகை மீண்டும் கிடைக்கும் என பேசினார்.




திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட வீரக்கல் ஊராட்சி, கள்ளநாட்டாண்பட்டியில் வசிக்கும் கிராம மக்கள் தங்கள் பகுதிக்கு பகுதி நேர நியாயவிலைக்கடை வேண்டுமென கோரிக்கை விடுத்ததையடுத்து, அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உடனடியாக அப்பகுதியில் பகுதிநேர நியாயவிலைக்கடை திறக்க உத்திரவிட்டார். அதன்படி கள்ளநாட்டாண் பட்டியில் பகுதிநேர நியாயவிலைக்கடையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்துவைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். அதன்பின்னர் நிருபர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அதிமுக 2026 சட்டமன்ற தேர்தலில் 210 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று சொல்லியிருக்கிறாரே, என்று நிருபர்கள் அமைச்சரிடம் கேட்டபோது அதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முதலில் அவர்கள் எத்தனை இடங்களில் போட்டியிடப்போகிறார்கள் என்று அறிவிக்கட்டும், 210 இடங்களில் அவர்கள் வெற்றி பெறமாட்டார்கள். திமுக கூட்டணி வெற்றி பெறும் 210 தொகுதிகள் போக மீதமுள்ள 24 தொகுதிகளில் மட்டும் அவர்கள் வெற்றிபெறலாம் என்றார். அப்போது அங்கிருந்த திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மகிழ்ச்சியில் கை தட்டினார்கள். அதனைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகர்; கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு பொற்கால ஆட்சியயை வழங்கி வருகிறார். அவரே மீண்டும் முதல்வராக வரவேண்டும் என்பதே தமிழக மக்களின் விருப்பமாக உள்ளது. 2026ல் திமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றார். நிகழ்ச்சியின்போது திமுக கழக செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், இன்பராஜ், பாறைப்பட்டி ராமன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேஸ், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காணிக்கை சாமி. செல்வி காங்கேயன், ஆத்தூர் தெற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் கருத்தராஜா, கலாபச்சை, பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வசந்தகுமார், இராஜகணேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், அரசு ஒப்பந்தாரர்கள் ஜீசஸ் அகஸ்டீன், மெல்லின், விக்னேஸ்வரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.என்.போஸ், பொறுப்பு குழு உறுப்பினர்கள் கீர்த்தனா, மெடிக்கல் கோபி, முத்துவேல் உட்பட திமுக நிர்வாகிகள், இளைஞரணியினர் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், ஸ்ரீ மீனாட்சி அரசினர் கலைக் கல்லூரி கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு நடத்தப்பட்ட ஓவிய போட்டியில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் இ.ஆ.ப., வழங்கினார். அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு.அருள் சுந்தரேகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சாமிநாதன், மாற்றுத்திறனாளிகள் வழிகாட்டி அலுவலர் வெங்கட சுப்பிரணிமணியன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கேரள உள்ளாட்சி தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வி; திருவனந்தபுரம் மேயர் பதவியை கைப்பற்றியது பாஜ



திருவனந்தபுரம், டிச14-: கேரள உள்ளாட்சி தேர்தலில் ஆளும் இடதுசாரி ஜனநாயக கூட்டணி பெரும்பாலான இடங்களில் பின்னடைவை சந்தித்துள்ளது. திருவனந்தபுரம் மாநகராட்சியை பாஜ கூட்டணி தன்வசப்படுத்தி இருக்கிறது.

கேரள சட்டசபைக்கு அடுத்தாண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அம்மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அண்மையில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. மொத்தம், 1,199 உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடந்த தேர்தலில் பதிவான ஓட்டுகள், இன்று காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு வருகின்றன. இந்தத் தேர்தலில் ஆளும் இடதுசாரி ஜனநாயக கூட்டணியைக் காட்டிலும், காங்கிரஸ் அங்கம் வகிக்கும் ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணியே பெரும்பான்மையை இடங்களில் முன்னிலை பெற்று வருகிறது.

மொத்தம் உள்ள 6 மாநகராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 4ல் முன்னிலை வகிக்கிறது. கண்ணூர், எர்ணாகுளம், கொல்லம், திருச்சூர் ஆகிய 4 மாநகராட்சியை காங்கிரஸ் கைப்பற்றுகிறது. ஆளும் இடதுசாரி கூட்டணி கோழிக்கோடு மாநகராட்சியில் முன்னிலை பெற்றுள்ளது. அதேபோல, திருவனந்தபுரம் மேயர் பதவியை பாஜ தன்வசப்படுத்துகிறது. மொத்தம் உள்ள 101 வார்டுகளில் பாஜ கூட்டணி 55 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

மொத்தம் உள்ள 941 கிராம பஞ்சாயத்துகளில் காங்கிரஸ் கூட்டணி 439 இடங்களிலும், இடதுசாரி கூட்டணி 373 இடங்களிலும், என்டிஏ கூட்டணி 23 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

மொத்தம் உள்ள 152 வட்டார ஊராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 81 இடங்களிலும், இடதுசாரி கூட்டணி 63 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

14 மாவட்ட பஞ்சாயத்துகளில் காங்கிரஸ் கூட்டணி 8 இடங்களிலும், இடதுசாரி கூட்டணி 6 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

87 நகராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 55 இடங்களிலும், இடதுசாரி கூட்டணி 28 இடங்களிலும், என்டிஏ கூட்டணி 2 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

அடுத்தாண்டு நடக்கும் சட்டசபை தேர்தலுக்கு, இந்த உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் ஒரு முன்னோட்டமாக பார்க்கப்படுகிறது.

# ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டது ஏன்: விமர்சனத்துக்கு சீமான் பதில்



சென்னை, டிச.14-

சென்னையில் நடந்த ஆர்எஸ்எஸ் நிகழ்வில் கலந்து கொண்டது விமர்சனத்திற்கு உள்ளானது குறித்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் விளக்கம் அளித்தார்.

ஆர்.எஸ்.எஸ்.,சின் பொது விவாத நிகழ்ச்சிகளை நடத்தும் அமைப்பான, 'விஜில்' சார்பில், சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், 'பாரதி பிறந்த தினம் மற்றும் வந்தே மாதரம் 150வது ஆண்டு தினம்' விழா நடந்தது.

'பாரதி கண்ட பங்கிம் சந்திர சட்டர்ஜியின் வந்தே மாதரம்: தமிழ் இளைஞர்களின் பார்வைக்கு' என்ற தலைப்பில் இந்த விழாவில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கவிஞர் வைரபாரதி ஆகியோர் பேசினர்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றது குறித்து நிருபர்களிடம் சீமான் கூறியதாவது:

கலந்து கொண்டது குறித்து விமர்சனங்கள் ஏதும் இல்லை என்றால் ஏன் கலந்து கொள்ள வேண்டும்? ஆர்எஸ்எஸ் மற்றும் திமுக சமூக இயக்கங்கள் என்று சொன்னது நானா, அவர்களா? அது ஆர்எஸ்எஸ் இயக்கம் அது எல்லாம் கிடையாது. இலக்கிய அமைப்பு பாரதி பற்றி பேசு என்று சொன்னார்கள். நான் பாரதியை எங்கும் பேசுவேன். பாரதி இருக்கிற இடத்தில், பாரதி என்பது தமிழ். தமிழ் என்பது எனது தாய்.

திமுக கூட்டத்திலும்...!

தாய் இருக்கும் இடத்தில் மகன் இருப்பேன். அவ்வளவு தானே, நாளைக்கு திமுகவை பாரதி பற்றி கூட்டம் போட சொல்லுங்கள், நான் போய் பேசுகிறேன். 12 வருடம் திராவிட கழகம் மேடையில் பேசும் போது இனித்தது. ராஜ்நாத் சிங் உங்கள் தந்தையின் காசுவை வெளியிட்டார். பாஜவுக்கு 5 ஆண்டுகள் நிலையான ஆட்சியை கொடுத்து, இந்தியா முழுமைக்கும் தனது அதிகார கிளையை பரப்புவதற்கு உதவியாக இருந்தவர் கருணாநிதி என ராஜ்நாத் சிங் பேசியது வீடியோ இருக்கிறது போட்டு காட்டவா?

இதற்கு கருத்து?

இன்றைக்கு வேல்ஸ் திறப்பு விழாவில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பங்கேற்கும் போது உங்கள் அமைச்சர், உங்கள் ராஜ்யசபா எம்பி கமல் பங்கேற்கிறார்களே இதற்கு கருத்து? எங்க போய் நிற்கிறேன் என்று பேசாதே, என்ன பேசினேன் என்று பேசுங்கள். இவ்வாறு சீமான் கூறினார்.

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட விரிவாக்கம்: 17 லட்சம் பெண்களுக்கு முதல்வர் வழங்குகிறார்



சென்னை, டிச.14-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ம் கட்ட விரிவாக்கத்தில் 17 லட்சம் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும்நிகழ்வை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைக்கிறார்.

கடந்த 2023ம் ஆண்டு மார்ச் 27ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின், ‘‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒருகோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ரூ.1000 வழங்கிடும் வகையில் அமைந்திடும்’’ என அறிவித்தார்.

சென்னையில் விழா அதன்படி, முதல் கட்டமாக சுமார் 1,13,75,492 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி அவர்கள் வங்கிக்கணக்கில் ரூ.1000 செலுத்தப்பட்டு வருகிறது. இதையடுத்து, தற்போது இத்திட்டம் இரண்டாம் கட்டமாக விரிவாக்கப்படுகிறது. இதற்கான நிகழ்ச்சி இன்று மாலை 3 மணிக்கு சென்னை நேரு உள்விளையாட் டரங்கில் நடைபெறுகிறது.

இதில், புதிய பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

சமூக சேவகி பங்கேற்பு: இந்நிகழ்ச்சியில், சமூக சேவகியும், சமூக அநீதிகளுக்கு எதிராக காந்திய வழியில் போராடியவரும் பத்மபூஷன் விருது பெற்றவருமான கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் மற்றும் 2022ம் ஆண்டு சீனாவின் காங்சோவில் நடைபெற்ற மாற்றுத்திறனாளர் ஆசிய விளையாட்டு பூப்பந்து போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவருமான துளசிமதி முருகேசன் உள் ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஏற்கெனவே, 1,13,75,492 பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கப்பட்டுவரும் நிலையில், தற்போது விதிமுறைகளில் சில தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. அதாவது முன்பு நான்கு சக்கர வாகன உரிமையாளர் என்ற விதிமுறை தளர்த்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தற்போது 17 லட்சம் பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், திட்டம் தொடங்கப்பட்ட கடந்த 202324ம் ஆண்டு முதல் கடந்த நவம்பர் வரை இத்திட்டத்துக்கு மொத்தம் ரூ.35,741.92 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பயனாளிகளுக்கு ரூ.30,838.45 கோடி வங்கிக்கணக் கில் சேர்க்கப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு எதிரான 50 சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும்; அமெரிக்க பார்லியில் தீர்மானம்



வாஷிங்டன், டிச.14-

இந்தியாவுக்கு எதிராக 50 சதவீத வரி விதிக்கும் அதிபர் டிரம்ப்பின் அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானம், அமெரிக்க பார்லியில் கொண்டு வரப்பட்டுள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து பெட்ரோலியம் வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியாவுக்கு எதிராக 50 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். இந்த நடவடிக்கையால் இந்தியா அமெரிக்கா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும், ரஷ்யாவுடன் அதிக நெருக்கத்தை இந்தியா காட்டி வருகிறது.

இதன் காரணமாக, அதிபர் டிரம்ப்பின் வரிவிதிப்பு முடிவுக்கு சொந்த நாட்டிலேயே கடும் எதிர்ப்பு கிளம்பியது. அமெரிக்க பார்லி உறுப்பினர்கள் வெளிப்படையாக டிரம்ப்பின் முடிவை விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவுக்கு எதிராக 50 சதவீத வரியை விதிக்கும் அதிபர் டிரம்ப்பின் அறிவிப்பை ரத்து செய்யக்கோரிய தீர்மானத்தை அந்நாட்டு பார்லி உறுப்பினர்கள் டெபோரா ரோஸ், மார்க் வீசி, ராஜா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கொண்டு வந்துள்ளனர்.

வட கரோலினா, வட டெக்ஸான் உள்ளிட்ட அமெரிக்க மாகாணங்கள் இந்தியாவுடன் கலாசார ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் தொடர்புடையவை. டிரம்ப்பின் வரி விதிப்பால், இந்த மாகாணங்களில் வசிக்கும் மக்கள் விலைவாசி உயர்வு, வர்த்தக பாதிப்பு போன்றவையால் அதிகம் பாதிக்கின்றனர்.

இந்தியா அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது; அமெரிக்க நலன்களையோ பாதுகாப்பையோ முன்னேற்றுவதற்குப் பதிலாக, இந்த வரிகள் எதிர் விளைவுகளை உண்டாக்குகின்றன. விநியோக சங்கிலிகளைச் சீர்குலைக்கின்றன. அமெரிக்க தொழிலாளர்களுக்கு தீங்கு விளைவிக்கின்றன.

மக்களுக்கான செலவுகளை அதிகரிக்கின்றன. இந்தப் பிரச்னையில் தீர்வு காணப்பட்டால், அமெரிக்கா இந்தியா பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த முடியும், இவ்வாறு கூறினார்.

# டிச.15 ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைப்பு; எம்ஜிஆர் நினைவு நாளில் முடிவை அறிவிக்கிறார் ஓபிஎஸ்!



சென்னை, டிச.14-

தனது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்த முடிவை அறிவிப்பதற்காக டிசம்பர் 15ம் தேதி நடைபெறவிருந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் ஓ.பன்னீர்செல்வம் அதிமுக தொண்டர் உரிமை உரிமை மீட்புக் குழு என்ற பெயரில் செயல்பட்டு வருகிறார். இந்த அமைப்பின் சார்பில் பாஜக கூட்டணியில் இணைந்து 2024 மக்களவைத் தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட்ட ஓபிஎஸ் தோல்வியை தழுவினார்.

2024 மக்களவைத் தேர்தலில் அதிமுக தனி அணியாக போட்டியிட்ட நிலையில், சில மாதங்களுக்கு முன்பு பாஜகவின் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக இணைந்தது. தமிழகத்தில் அந்த கூட்டணியின் தலைவராக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இருப்பார் என பாஜக அறிவித்தது. இதன் பின்னர் பாஜகவின் பார்வை ஓபிஎஸ் மீது படவில்லை. அதன்பின்னர் தமிழகம் வந்த பிரதமர் மோடி, அமித்ஷா போன்றோரை சந்திக்க ஓபிஎஸ்க்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால் விரக்தியடைந்த ஓபிஎஸ் பாஜக கூட்டணியிலிருந்து வெளியேறினார்.

அதன் பின்னரும் அதிமுகவில் இணைய பல கட்ட முயற்சிகளை செய்த நிலையில் அவை பலிக்காததால், அரசியலில் தனது அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து டிசம்பர் 15ம் தேதி அறிவிப்பதாக கூறியிருந்தார் ஓ.பன்னீர்செல்வம். இந்தச் சூழலில், சமீபத்தில் டெல்லி சென்ற ஓபிஎஸ், உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்துப் பேசினார்.

இதனையடுத்து, டிசம்பர் 15ம் தேதி நடைபெறவிருந்த ஓபிஎஸ்ஸின் ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், எம்ஜிஆரின் நினைவுதினமான டிசம்பர் 24ஆம் தேதி ஓபிஎஸ் தனது நிலைப்பாட்டை அறிவிப்பார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# சவுக்கு சங்கர் வீட்டுக்கதவை உடைக்கும் முயற்சியில் போலீஸ்



சென்னை, டிச.14-

சினிமா தயாரிப்பாளரை தாக்கியதாக கூறி பதிவு செய்யப்பட்ட வழக்கில், யூடியூபர் சவுக்கு சங்கரை கைது செய்ய வந்துள்ள போலீசார், அவரது வீட்டுக்கதவை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர், தமிழக அரசுக்கு எதிராகவும், போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளை யூடியூப் சேனல்களில் கூறி வந்தார். இதனால் அவர் மீது வெவ்வேறு போலீஸ் ஸ்டேஷன்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட அவர் மீது குண்டர் சட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த வழக்குகள் தொடர்பாக, சுப்ரீம் கோர்ட்டில் தடையுத்தரவு மற்றும் ஜாமின் பெற்று வெளியில் வந்த அவர், மீண்டும் தனது சவுக்கு மீடியா சேனலை நடத்தி வந்தார். இந்நிலையில், அவர் மீதும், அவரது குழுவில் பணியாற்றுவோர் மீதும் ஆதம்பாக்கம் போலீசார், சினிமா தயாரிப்பாளரை தாக்கியதாக வழக்கு பதிந்திருந்தனர்.

இந்த வழக்கில் அவரை கைது செய்வதற்காக, இன்று காலை சென்னை மாநகர போலீஸ் படையினர் அவரது வீட்டை சுற்றி வளைத்தனர். வீடு உள்பக்கமாக பூட்டப்பட்டிருந்ததால் போலீசாரால் உடனடியாக கைது செய்ய முடியவில்லை.வீட்டினுள் இருந்த சவுக்கு சங்கர், தன்னை கைது செய்வதற்காக போலீசார் வந்துள்ளதாக, வீடியோ வெளியிட்டார்.

வேறு வழியில்லாத நிலையில், வழக்கறிஞர்கள் வரும் வரை போலீசார் காத்திருந்தனர். வந்த வழக்கறிஞர்களுக்கும், போலீசாருக்கும் நீண்ட நேரம் வாக்குவாதம் நடந்தது. தீர்வு எதுவும் ஏற்படாத நிலையில், வீட்டின் கதவை உடைக்கும் முயற்சியில் தீயணைக்கும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.





# தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம்

திருப்பரங்குன்றம், டிச.14-

திருப்பரங்குன்றம் மலை உச்சி தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வலியுறுத்தி, உள்ளூர் மக்கள் இன்று (டிச.,13) நீதிமன்ற நிபந்தனைகள் படி, உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருப்பரங்குன்றம் கோவில் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற, உயர் நீதிமன்றக் கிளை டிச., 1ல் உத்தரவிட்டது. இதை கோவில் நிர்வாகம் நிறைவேற்றவில்லை. உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது.

தீபத்தூணில் தீபம் ஏற்ற வலியுறுத்தி, உண்ணாவிரத போராட்டம் நடத்த கிராம மக்கள் முடிவு செய்தனர். இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.ஸ்ரீமதி, ''காலை 9:00 முதல் மாலை 5:00 மணி வரை அனுமதி அளித்து உத்தரவிட்டார்.

''50 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும். அரசியல் விமர்சனம் கூடாது. கோஷம் எழுப்பக்கூடாது. மந்திரம் மட்டுமே உச்சரிக்க வேண்டும். வீடியோ பதிவு செய்ய வேண்டும்'' என நீதிபதி நிபந்தனை விதித்து இருந்தார். அதன்படி உள்ளூர் மக்கள் காலை 9 மணி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




# விஜயிடம் விசாரிக்க சி.பி.ஐ., திட்டம்

கரூர், டிச.14-

கரூர், வேலுச்சாமிபுரத்தில் நடந்த நெரிசல் விபத்து தொடர்பான வழக்கை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இதற்காக, கரூர் கலெக்டர் அலுவலக பயணியர் மாளிகையில், சி.பி.ஐ., சிறப்பு அலுவலகம் செயல்படுகிறது. இங்கு, சிபிஐ எஸ்பி பிரவீன்குமார் தலைமையிலான அதிகாரிகள் குழு விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தவெக பொதுச்செயலர் ஆனந்த், இணை பொதுச்செயலர் நிர்மல் குமார், தேர்தல் பிரிவு பொதுச்செயலர் ஆதவ் அர்ஜூனா உள்ளிட்டோரிடம், சிபிஐ அதிகாரிகள் ஏற்கனவே விசாரணை நடத்தினர். இந்நிலையில், கரூர் மாவட்ட அரசு தரப்பு மற்றும் போலீசார் வழங்கிய ஆவணங்களை சிபிஐ அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இதன் அடிப்படையில் த.வெ.க., தலைவர் விஜயை சம்மன் அனுப்பி நேரில் விசாரிக்க முடிவு செய்துள்ளனர். கரூருக்கு விஜயை அழைத்தால் பாதுகாப்பு ஏற்பாடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இருப்பதால், சென்னை சிபிஐ அலுவலகத்தில் விசாரிக்க திட்டமிட்டுள்ளனர். இதற்காக, விஜய்க்கு டில்லியில் இருந்து சம்மன் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# துபாயில் இருந்து சென்னை புறப்பட்ட ஏர் இந்தியா விமானத்தில் கோளாறு; பயணிகள் அவதி




துபாய், டிச.14-

துபாயில் இருந்து சென்னை புறப்பட்ட ஏர் இந்தியா விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதனால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

துபாயில் இருந்து சென்னைக்கு பயணிகள் 172 பேருடன் ஏர் இந்தியா விமானம் புறப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதை அறிந்த விமானி துபாய் விமான நிலையத்திற்கு தகவல் கொடுத்தார். பின்னர் விமானம் தரையிறக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது.

பின்னர் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. விமானத்தில் கோளாறை சரி செய்யும் பணியில் தொழில்நுட்ப நிபுணர்கள் ஈடுபட்டு இருக்கின்றனர். இதனால் பயணிகள் 172 பேர் கடும் அவதி அடைந்தனர். பயணிகள் அனைவருக்கும் மாற்று ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது என ஏர் இந்தியா விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.



# தென் மாவட்டங்களில் மிதமான மழை

சென்னை, டிச.14-

'தமிழகத்தில், தென் மாவட்டங்களில் சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

கிழக்கு திசையில் இருந்து வீசும் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில், டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில், சில இடங்கள் மற்றும் புதுச்சேரியில், இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சில இடங்களில், இன்று அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். சில இடங்களில், அதிகாலை லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழக தென் மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில், இன்று முதல் 15 வரை, சூறாவளிக்காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

# டில்லிக்கு புறப்பட்டு சென்றார் தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன்



சென்னை, டிச.14-

பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியில், தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் டில்லி புறப்பட்டு சென்றார்.

அதிமுக பொதுக்குழுவில், கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரமும் பழனிசாமிக்கு வழங்கப்படுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் நேற்றுமுன்தினம் இபிஎஸ்ஐ சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசினார்.

பின்னர் நிருபர்கள் சந்திப்பில் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு குறித்து ஏதும் இபிஎஸ் உடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என நயினார் நாகேந்திரன் திட்டவட்டமாக கூறினார். இருந்தாலும், இந்த சந்திப்பில் கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. இந்த பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியில், இன்று நயினார் நாகேந்திரன் டில்லி புறப்பட்டு சென்றார்.

அவர், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ., தேசிய தலைவர் நட்டா உள்ளிட்டோரை சந்திக்கிறார். தொகுதி பங்கீடு மற்றும் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைப்பது குறித்து விவாதிப்பார் என தெரிகிறது. டில்லியில் அமித் ஷாவை சந்தித்த பின், நயினார் நாகேந்திரன் மீண்டும் இபிஎஸ்ஐ சந்தித்து, இதுதொடர்பாக பேசுவார் என வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# திருப்பதி ஏழுமலையானை குடும்பத்துடன் தரிசனம் செய்த ரஜினிகாந்த்



திருமலை:, டிச.14-

திருப்பதி ஏழுமலையானை இன்று காலை நடிகர் ரஜினிகாந்த் தனது குடும்பத்தாருடன் தரிசனம் செய்தார்.

நடிகர் ரஜினிகாந்தின் 75 வது பிறந்தநாளை நேற்று அவரது ரசிகர்கள் மிகவும் உற்சாகமாக கொண்டாடினர். இந்த நிலையில் நேற்று மாலை ரஜினிகாந்த் தனது குடும்பத்தாருடன் திருப்பதிக்கு சென்றார். பின்னர் அவர் இரவு திருமலையில் தங்கினார். இதனைத் தொடர்ந்து இன்று காலை நடிகர் ரஜினிகாந்த் தனது மனைவி லதா, மகள்கள் ஐஸ்வர்யா, சௌந்தர்யா மற்றும் மருமகன்கள் பேரன்கள், உறவினர்கள் என அனைவரும் இணைந்து விஐபி பிரேக் மூலமாக சுவாமியை தரிசனம் செய்தார்.

அப்போது அவர் துலாபாரத்தில் தனது எடைக்கு இணையாக நாணயங்களை வழங்கினார். மேலும் அவரது மனைவி, மகள்கள், பேரன்மார்களும் தங்களது எடைக்கு எடையாக நாணயங்கள், வெல்லம், சர்க்கரை போன்றவற்றை வழங்கினர். அதன் பின்னர் ஏழுமலையானை தரிசனம் செய்தனர். இதனை தொடர்ந்து ரங்கநாயக மண்டபத்தில் ரஜினிகாந்த் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு தேவஸ்தான அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்களை வழங்கி கவுரவித்தனர்.

பின்னர் கோயிலுக்கு வெளியே வந்த ரஜினிகாந்த்தை பார்த்த ரசிகர்கள், ‘தலைவாஞ் தலைவா’ என கோஷமிட்டனர். பின்னர் விடுதிக்கு சென்று சற்று நேரம் ஓய்வெடுத்த ரஜினிகாந்த் காரில் சென்னைக்கு புறப்பட்டு சென்றார்.

# காப்பீட்டு துறையில் 100% அந்நிய முதலீட்டுக்கு அமைச்சரவை ஒப்புதல் ப.சிதம்பரம் வரவேற்பு



புதுடெல்லி, டிச.14-

காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பை 100% ஆக உயர்த்தும் காப்பீட்டு திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில், முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அதனை வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ‘‘காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் முடிவை நான் வரவேற்கிறேன்.

ஐ.கே. குஜ்ரால் ஆட்சியின்போது, காப்பீட்டுத் துறையில் 20% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது அதனை பாஜக எதிர்த்த அந்த நாளை நான் நினைவு கூர்கிறேன். 1997இல் இருந்து நாம் தற்போது கடந்து வந்திருப்பது மிக நீண்ட தூரம்’’ எனத் தெரிவித்துள்ளார்.

வரும் 2047க்குள் அனைவருக்கும் காப்பீடு என்ற இலக்கை மையப்படுத்தி காப்பீட்டுத் துறையில் மத்திய அரசு சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. தற்போது காப்பீடு துறையில் அந்நிய நேரடி முதலீடு 74% ஆக உள்ள நிலையில், அதனை 100% ஆக உயர்த்த பிரதமர் மோடி தலைமையில் நேற்று கூடிய பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த பிப்ரவரியில் பட்ஜெட் தாக்கலின்போது பேசிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ‘‘காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீடு 100% ஆக உயர்த்தப்படும். முழு ப்ரீமியம் தொகையையும் இந்தியாவில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு இந்த உயர்வு பொருந்தும். அந்நிய நேரடி முதலீடு தொடர்பான விதிமுறைகள், நிபந்தனைகள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு எளிமையாக்கப்படும்’’ என அறிவித்தார்.

அந்நிய நேரடி முதலீடு 100% ஆக உயர்த்தப்படுவதன் மூலம் காப்பீடுதுறையில் வெளிநாட்டு நிறுவனங்கள் அதிகளவில் முதலீடுகளைச் செய்ய முன்வரும். இதன்மூலம், நாடு முழுவதும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். தற்போது நாட்டில் 25 ஆயுள் காப்பீடு நிறுவனங்களும், 34 பொது காப்பீடு நிறுவனங்களும் உள்ளன. காப்பீடு துறையில் அந்நிய நேரடி முதலீடு, கடந்த 2015ம் ஆண்டில் 26 சதவீதத்திலிருந்து 49 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அதன்பின் கடந்த 2021ம் ஆண்டில் 49 சதவீதத்திலிருந்து 74 சதவீதமாக உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரூபாய் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி 1 டாலருக்கு ரூ.90.56 ஆக சரிவு

அமெரிக்கா, டிச.14-

அமெரிக்கா டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இன்று வரலாறு காணாத சரிவை எட்டியுள்ளது. இன்றைய வர்த்தகத்தின் முடிவில், ஒரு அமெரிக்க டாலர் 90 ரூபாய் 56 பைசாவாக இருந்தது.

நேற்றைய முடிவை விட, இன்று ஒரே நாளில் ரூபாய் மதிப்பு கிட்டத்தட்ட 20 பைசா சரிந்துள்ளது. சர்வதேச அளவில் டாலரின் மதிப்பு தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், இந்தியாவில் இருந்து வெளிநாட்டு முதலீடுகள் வெளியேறுவதே இந்தச் சரிவுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியப் பங்குகள் மற்றும் கடன் சந்தைகளில் இருந்து அதிக அளவில் தங்கள் பணத்தை திரும்ப எடுத்துச் செல்கிறார்கள். இதனால் சந்தையில் டாலருக்கான தேவை அதிகரித்து, ரூபாயின் மதிப்பு குறைவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளில் இன்னும் ஒரு தீர்வு எட்டப்படாமல் உள்ளது. இந்தத் தேக்க நிலை காரணமாகவும் முதலீட்டாளர்களுக்கு இந்தியப் பொருளாதாரம் மீது ஒருவித சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மேலும் ரூபாயின் மதிப்பு குறையும்போது, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக விமான எரிபொருள், சமையல் எண்ணெய், மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள் போன்றவற்றின் விலை உயரக்கூடும்.

இவற்றின் விலை அதிகரித்தால், இந்தியாவில் உள்ள அனைத்துப் பொருட்களின் போக்குவரத்துச் செலவும் கூடும். இதன் விளைவாக, அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறுவதற்கு வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

# வாக்குசாவடி முகவர்கள்தான் வாக்குசாவடியின் எஜமானர்கள் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

## ஐந்து மாதம் அயராது உழைத்தால் ஐந்து வருடம் உங்களுக்கு பலன் கிடைக்கும்

## பி.எல்.ஏ2, பி.எல்.சி, பி.எல்.டி முகவர்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்



சின்னாளபட்டி, டிச.14

வாக்குசாவடி முகவர்கள்தான் வாக்குசாவடியின் எஜமானர்கள் என்று ஜெ.புதுக்கோட்டையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு வரும் ஐந்து மாதம் அயராது உழைத்தால் ஐந்து வருடம் உங்களுக்கு பலன் கிடைக்கும் என்று பி.எல்.ஏ2, பி.எல்.சி, பி.எல்.டி முகவர்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீவல்சரகு ஊராட்சி ஜெ.புதுக்கோட்டையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் தலைமையில் வாக்கு சாவடி நிலை முகவர்களான பி.எல்.ஏ2, பி.எல்.சி, பி.எல்.டி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. திமுக நிர்வாகிகள் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் மத்தியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசும்போது வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் முக்கிய பங்கு உங்களுக்கு உள்ளது. வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வருவது முதற்கொண்டு வாக்கு பதிவு செய்யும்வரை உங்கள் பணி முக்கியமானது. நீங்கள் நாளை முதல் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று ஒவ்வொரு குடும்பமாக சந்தித்து அப்பகுதியில் உள்ள குறைகளை கேட்டறிந்து அதை குறிப்பெடுத்து எனது கவனத்திற்கு கொண்டுவந்தால் எந்த பணி அவசியம் என்பதை உணர்ந்து உடனடியாக அதை நிறைவேற்றி விடலாம். இதுதவிர நீங்கள் சந்திக்கும் வாக்காளர்கள் எந்தவிதமான குறைகள் சொன்னாலும் நீங்கள் பொறுமையாக கேட்டறிந்து, அதை நிறைவேற்ற உறுதுணையாக இருக்க வேண்டும். இது தவிர தமிழக அரசின் சாதனைத் திட்டங்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து உங்களிடம் வழங்கப் பட்ட துண்டு பிரசுரங்களை வீடு தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும். வருகின்ற 5 மாதங்கள் நீங்கள் அயராது உழைத்தால் 5 வருடங்கள் உங்களுக்கு பலன்கள் கிடைக்கும் என்றார். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஆத்தூர் தொகுதியில் ஒரு ரூபாய் கூட வாங்காமல் வழங்கப்பட்ட அரசு பணிகள், விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கிய 3 சதவீத இட ஒதுக்கீடு, மகளிருக்கு வழங்கப்பட்ட சாதனைத் திட்டங்கள் குறித்து நீங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் எடுத்துரைத்தால் போதும் உங்கள் பகுதியில் அதிக ஓட்டுக்களை நமது கழகத்திற்கு பெற்றுத்தர முடியும் என்றார். நிகழ்ச்சி யின்போது திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஆத்தூர் தொகுதி திமுக தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, ஆத்தூர் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ராஜேந்திரன், ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் கலா பச்சை, கருத்தராஜா, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் கலைச்செல்வி முருகன், மாவட்ட பிரதிநிதி செம்பட்டி கிட்டு, திமுக நிர்வாகி அம்பை ரவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் வசந்தகுமார் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்டாலினின் கடைசி அஸ்திரம்: அண்ணாமலை காட்டம்

கோவை:, டிச.14-

‘‘பொங்கல் தொகுப்புக்கு 3000 ரூபாய் கொடுப்பது, மகளிர் உரிமைச் சேவை கொடுத்தல், போன்றவை தான் ஸ்டாலினின் கடைசி அஸ்திரம். ஆனால் வரும் தேர்தலில் மக்கள் தெளிவான முடிவெடுப்பர்,’’ என பாஜ., தமிழக முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறினார்.

கோவையில் தமிழக பாஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை பேட்டி: உள்ளாட்சித் துறையில் ஊழல் நடந்திருப்பதாய் சுட்டிக்காட்டி அமலாக்கத்துறை தமிழக டிஜிபிக்கு அக்டோபர் 2025 இல் ஒரு கடிதம் எழுதி இருந்தது. அதில் 150 பேரை குறிப்பிட்டு, வாட்ஸ் அப் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களை கொடுத்திருந்தது.

அது தொடர்பாக இதுவரை போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை. அமலாக்க துறை மறுபடியும் டிசம்பர் 3ம் தேதி ஒரு கடிதத்தை எழுதி உள்ளது. 258 பக்கம் கொண்ட அந்த கடிதத்தில், அமைச்சர் நேரு தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாகம், குடிநீர் வளங்கள் துறையில் 1020 கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதற்கான ஆதாரத்தை இணைத்துள்ளனர்.

இன்ஜினியர்களை பணியமர்த்தியதில் ஒரு இன்ஜினியருக்கு 25 முதல் 35 லட்சம் ரூபாய் வரை லஞ்சமாக 882 கோடி ரூபாய் முதல் ஊழல் நடந்துள்ளது. ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையில், ஊராட்சி செயலாளர் எழுத்து தேர்வு நடந்துள்ளது. நேற்று முன்தினம் இதற்கான நேர்முகத் தேர்வு ரத்து செய்யப்பட்டதாக குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டது.

இந்த துறையின் இணையதளத்தை நேற்று பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதில் உள்ள குளறுபடிகள் வெளியாகி உள்ளது. உதாரணத்துக்கு கோவையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த பெண் ஒருவர், ஐநூறு மார்க்கிற்கு 494 மார்க் வாங்கி செலக்ட் ஆகியுள்ளார்.

496 மதிப்பெண் வாங்கியவர் தோல்வி அடைந்துள்ளார். எந்த அடிப்படையில் தேர்வு செய்தனர் என்பது யாருக்கும் தெரியாது. கோவை, மதுரை, கரூர் மூன்று மாவட்ட பட்டியலை பகிர்ந்துள்ளோம். இதிலும் கூட லஞ்சம் கை மாறி இருப்பதாக தெரிகிறது. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணியில், இதுவரை 77 லட்சம் பேர் பல்வேறு காரணங்களால் நீக்கப்பட்டுள்ளனர்.

வரைவு வாக்காளர் பட்டியலில் 12.5 சதவீதம் நீக்கப்பட்டுள்ளது ஆச்சரியம் மட்டுமல்ல, அதிர்ச்சியும் கூட. கடந்த தேர்தல்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கப்பட்டும் கூட, வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இந்த பணியின் முதல் கட்ட வெற்றி இது. 5.6 கோடி வாக்காளர்கள் தான் இருப்பர்.

பொங்கல் தொகுப்புக்கு 3000 ரூபாய் கொடுப்பது, மகளிர் உரிமைச் சேவை கொடுத்தல், போன்றவை தான் முதல்வரது கடைசி அஸ்திரம். ஆனால் வரும் தேர்தலில் மக்கள் தெளிவான முடிவெடுப்பர். அடுத்த தேர்தலை பொறுத்தவரை இப்போதைக்கு நான்கு முனை தேர்தல். தி.மு.க., த.வெ.க., கூட்டணி, விஜய், சீமான் உள்ளனர். கடைசி நேரத்தில் மாறும்.இவ்வாறு அண்ணாமலை கூறினார்.



# சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு கோரி ராமதாஸ் தலைமையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, டிச.14-

சாதிவாரி மக்கள்தொகை கணக் கெடுப்பு, வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு கோரி ராமதாஸ் தலைமை யில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சாதிவாரி மக்கள்தொகை கணக் கெடுப்பு நடத்த வேண்டும். வன்னியர் களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு சட் டத்தை நடைமுறைப்படுத்த வேண் டும். அனைத்து சாதியினருக்கும் உரிய இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கோரி பாமக, வன்னியர் சங்கம் சார் பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் நேற்று ஆர்ப்பாட் டம் நடை பெற்றது.

பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமை யில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், அவரது மகளும் செயல் தலைவருமான ஸ்ரீகாந் தி, கவுரவத் தலைவர் ஜி.கே.மணி உள் ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். இதே போல், தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட் டங்கள் நடைபெற்றன.

சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ராமதாஸ் பேசியதாவது: 324 சமுதாயங் களும் வாழ வேண்டும் என்று பல்வேறு போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். தமிழகம்தான் இந்தியாவுக்கு சமூகநீதி யின் வழிகாட்டி என்று சொல்கிறோம்.

இடஒதுக்கீடு வழங்கினால் அந்த பெருமை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தான் கிடைக்கும். இட ஒதுக்கீட்டுக்காக நாங்கள் எவ்வளவோ செய்துவிட்டோம். இதற்கு மேல் ஏதாவது செய்தால், அது மக்களை பாதிக்கும்.

பாமக என்பது ஒரே கட்சிதான்: தேர் தல் வரக்கூடிய இந்த நேரத்தில் இடஒதுக் கீடு கொடுத்தால், ஆளுங்கட்சிக்குதானே நன்மை கிடைக்கும். அதை செய்ய எது தடுக்கிறது? சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி இடஒதுக்கீடு வழங்க முதல்வர் உத்தரவிட வேண்டும்.

இதனால், எல்லா சமுதாயமும் மகிழ்ச்சி அடையும். எனவே, சாதிவாரி கணக்கெடுப்பை உடனே நடத்துங்கள். இருக்கும் புள்ளிவிவரங்களின் அடிப்படை யில் சரியான இடஒதுக்கீட்டை இம்மாத இறுதிக்குள் பகிர்ந்து கொடுங்கள். பாமக என்பது ஒரே ஒரு கட்சிதான்.

அது, இது என்று சொல்லி ஏமாற்று வார்கள். மக்கள் ஏமாறமாட்டார்கள். எங் களுக்கு வேஷம் போடத் தெரியாது. இவ் வாறு அவர் பேசினார். ராமதாஸ் மகள் ஸ்ரீகாந்தி பேசும்போது, ‘‘ராமதாஸ்தான் நம்முடைய ஒரே தலைவர்.

இதற்கிடையே ‘நான்தான் தலை வர், தலைவி’ என்று கூறிக்கொண்டு சொகுசு பயணம் செய்பவர்கள் மத்தியில், 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்தே கிராமங்கள்தோறும் சென்று இயக்கத்தை கட்டிக்காத்தவர் ராமதாஸ். அவரை மறந் துவிட்டு, கட்சியை பிளவுபடுத்தி வரு கிறார்கள். இதனை முறியடிக்க ராமதாஸ் கரத்தை வலுப்படுத்தவேண்டும்’’ என்றார்.



# தமிழகத்தில் 27 பிடிஎஸ் இடங்களை நிரப்ப என்எம்சி அனுமதி ரூ.2 லட்சம் முன்பணம் செலுத்தி இடம் தேர்வு செய்யலாம்

சென்னை, டிச.14-

தமிழகத்தில் காலியாகவுள்ள 27 பிடிஎஸ் இடங்களை நிரப்ப தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி அளித் துள்ளது. அதன்படி, ரூ.2 லட்சம் முன்பணம் செலுத்தி மாணவர்கள் இடங்களைத் தேர்வு செய்யலாம் என்று மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் தெரி வித்துள்ளது.

தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல் லூரிகளில் அரசு ஒதுக்கீட்டுக்கு 6,600 எம்பிபிஎஸ், 1,583 பிடிஎஸ் இடங்களும், நிர்வாக ஒதுக்கீட்டுக்கு 1,736 எம் பிபிஎஸ், 530 பிடிஎஸ் இடங்களும் உள்ளன.

நடப்பாண்டில் இந்த படிப்புகளில் சேருவதற்கு 72,194 பேர் தரவரிசைப் பட்டியலில் தகுதி பெற்றனர். இதுவரை 4 கட்ட கலந்தாய்வு முடிந்த நிலையில் 25 எம்பிபிஎஸ் மற்றும் 27 பிடிஎஸ் என 52 இடங்கள் காலி யாக உள்ளன.

இந்த இடங்களை நிரப்புவதற்கு, தேசிய மருத்துவ ஆணையத்திடம் (என்எம்சி) தமிழக அரசின் மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் அனுமதி கேட்டது. அதற்கு, காலியாகவுள்ள பிடிஎஸ் இடங்களை மட்டுமே நிரப்பிக்கொள்ள ஆணையம் அனுமதி வழங்கிஉள்ளது.

அதன்படி, ஏற்கெனவே விண்ணப்பித்த மாணவர் களில், நீட் தேர்வில் 113 மதிப்பெண் உடையோர் முதல், பிடிஎஸ் படிப்புக்கான இடத்தை https://tnmedicalselection.net என்ற இணையதளத்தில் டிச.15ம் தேதி வரை தேர்வு செய்யலாம். அதற்கான முடிவுகள், 16ம் தேதி வெளியிடப்படும். இடங்கள் பெற்றவர்கள், 20ம் தேதி மாலை 5 மணிக்குள் கல்லூரிகளில் சேர வேண்டும்.

இதுகுறித்து, மருத்துவ மாணவர் சேர்க்கைக்குழு செயலர் லோகநாயகி கூறும்போது, ‘‘தற்போது 27 பிடிஎஸ் இடங்களை நிரப்புவதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சேர விரும்பும் மாணவர்கள் ரூ.2 லட்சம் முன்வைப் புத் தொகை செலுத்த வேண்டும். இடங்கள் ஒதுக்கீடு செய்து, கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத்தில், முன்வைப்பு தொகை நிகர் செய்யப்படும்.

இடங்கள் கிடைக்காதவர்களுக்கு, அவர்களின் வங்கி கணக்குக்கே பணம் திரும்ப அனுப்பப்படும். இடம் ஒதுக் கீடு செய்தபின், கல்லூரியில் சேராதவர்களுக்கு அப் பணம் திருப்பி தரப்பட மாட்டாது. காலியாகவுள்ள எம் பிபிஎஸ் இடங்களை நிரப்புவதற்கும் தேசிய மருத்துவ ஆணையத்திடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது’’ என்றார்.



■ மதுரை மாவட்டம், சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், வண்டபுலி கிராமத்தில் ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சமுதாய கூடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் இ.ஆ.ப.,ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# ஆத்தூர் தொகுதியில் 36 வருடங்களாக ஆதரவு அளித்து வரும் சின்னாளபட்டி கைத்தறி நெசவாளர்களை என்றும் மறக்கமாட்டேன் நியாயவிலை கடை திறப்புவிழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

## நெசவாளர்கள் வசிக்கும் பகுதிக்கு தார்ச்சாலை வசதி, பேவர்பிளாக் சாலை வசதி, தெருவிளக்கு வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படும் அமைச்சர் உறுதி

சின்னாளபட்டி டிச.14-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சீவல்சரகு ஊராட்சி பகுதியில் மா.பொ.சி. நெசவாளர் காலனி, கலைமகள் நெசவாளர் காலனி, கமலா நேரு நெசவாளர் காலனி உட்பட மூன்றுக்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் காலனிகள் உள்ளன. இங்கு சின்னாளபட்டியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் தங்களது ரேஷன் பொருட்களை அருகில் உள்ள ஜெ.புதுக்கோட்டை கிராமத்திற்கு சென்று வாங்கி வந்தனர். சுமார் 2 கி.மீ. தூரம் சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வருவதாகவும், தங்கள் பகுதியில் பகுதி நேர நியாய விலைக்கடை திறந்து வைக்க வேண்டுமென்று அமைச்சரிடம் இரு தினங்களுக்கு முன்பு மனு கொடுத்தனர். உடனடியாக கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்று அப்பகுதியில் பகுதி நேர நியாய விலைக்கடை திறக்க அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உத்திரவிட்டார். 11.12.2025 அன்று பகுதி நேர நியாயவிலைக்கடை திறப்புவிழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நியாயவிலைக் கடையை திறந்து வைத்து கைத்தறி நெசவாளர்களுக்கு ரேஷன் பொருட்களை விநியோகம் செய்த பின்பு, நெசவாளர்கள் மத்தியில் பேசும்போது கைத்தறி நெசவாளர்களுக்கும், திமுகவிற்கும் இருக்கும் உறவு இன்று, நேற்றல்ல. 1965ம் ஆண்டே கைத்தறி நெசவாளர்களுக்காக அறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் அண்ணா சாலையில் கைத்தறி துணிகளை தலையில் சுமந்து விற்பனை செய்து கைத்தறி நெசவாளர்களுக்காக தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். 1989ம் ஆண்டு ஆத்தூர் தொகுதியில் நான் முதன்முதலாக போட்டியிட்டபோது எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சின்னாளபட்டி கைத்தறி நெசவாளர்கள். அவர்களை உயிருள்ளவரை மறக்கமாட்டேன். சின்னாளபட்டி வாக்கு எண்ணிக்கைக்கு பின்புதான் கூடுதல் வாக்கு பெற்று நான் வெற்றிபெற முடிந்தது. இங்கிருக்கும் கைத்தறி நெசவாளர்கள் சின்னாளபட்டியைவிட்டு பிரிந்து அருகில் உள்ள கிராம ஊராட்சிக்கு வந்துவிட்டோம் என்று நினைக்க வேண்டாம். விரைவில் சின்னாளபட்டியுடன் இந்த கிராமமும் இணைந்து விடும். அந்த அளவிற்கு நகரங்கள் வளர்ச்சி பெற்று வருகிறது. இங்கு வரும்போதுதான் சாலை வசதி, தெருவிளக்கு வசதி குறைவாக இருப்பதை தெரிந்து கொண்டேன். ஒரு வார காலத்திற்குள் கைத்தறி நெசவாளர்கள் வசிக்கும் பகுதியில் முறையான தெருவிளக்கு வசதி, சாலை வசதி, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நெசவாளர்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதன்பின்னர் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் காக்க இப்பகுதியில் என்னனென்ன வசதிகள் செய்து கொடுக்கமுடியுமோ அவை அனைத்தையும் செய்து கொடுப்பேன், இது உறுதி என்றார். நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் இராகவ் பாலாஜி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், துணைப்பதிவாளர் பொது விநியோகத்திட்டம் எஸ்.டி.கார்த்திகேயன், சரக துணைப் பதிவாளர் கார்த்திக் கௌதம், திண்டுக்கல் மாவட்ட மொத்த கூட்டுறவு பண்டகசாலை செயலாட்சியர் கனகராஜ்ஆத்தூர் வட்டார பொதுவிநியோகத் திட்ட கூட்டுறவு சார்பதிவாளர் அறிவழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேஸ், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மேற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் கருத்தராஜா, கலாபச்சை, பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வசந்தகுமார், இராஜகணேஷ், சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பொறுப்பு குழு உறுப்பினர்கள் கீர்த்தனா, மெடிக்கல் கோபி, முத்துவேல் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கள அலுவலர்; அம்பிகேஸ்வரன், பித்தளைப்பட்டி கூட்டுறவு சங்க செயலாளர் சுப்பையா, காந்திகிராம கூட்;டுறவு சங்க செயலாளர் மஞ்சமாதா, கூட்டுறவு விற்பனையாளர்கள் பாலாஜி, இன்பராஜ், முருகவேல், அகஸ்டீன், யுவராஜ் உட்பட திமுக நிர்வாகிகள், இளைஞரணியினர் பலர் கலந்து கொண்டனர்.

# பார்லி தாக்குதல் தினம்: உயிர் நீத்த படையினருக்கு மோடி, சிபிஆர் மரியாதை

டெல்லி, டிச.14-

2001ல் பார்லிமென்டில் நடந்த தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்பு படையினர் படத்திற்கு, பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

கடந்த 2001ம் ஆண்டு, டிசம்பர் 13ம் தேதி பார்லிமென்ட் வளாகத்துக்குள் தீவிரவாதிகள் நுழைந்து தாக்குதல் நடத்த முயன்றனர். அதை பாதுகாப்புப் படையினர் முறியடித்தனர். இந்த சம்பவத்தில் பாதுகாப்புப் படையினர் 8 பேர், ஒரு தோட்டக்காரர் என மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர். அவர்களது நினைவாக, டிசம்பர் 13ம் தேதி ஆண்டுதோறும் பார்லி வளாகத்தில் அஞ்சலி செலுத்தப்படுகிறது.



அந்தவகையில் பார்லி வளாகத்தில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உயிரிழந்த பாதுகாப்பு படையினர் படத்திற்கு பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், லோக்சபா எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுல், சோனியா, மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மறக்க முடியாது


இது குறித்து பார்லி விவகாரத்துறை அமைச்சர் கிரண் KTü¨ கூறியதாவது: பார்லிமென்ட் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீரமரணம் அடைந்த பாதுகாப்பு படையினருக்கு ஒவ்வொரு ஆண்டும் அஞ்சலி செலுத்துகிறோம். ஜனநாயக கோவிலை காப்பாற்ற துணிச்சலாக செயல்பட்டு உயிரை தியாகம் செய்த பாதுகாப்பு படையினரை நாம் ஒருபோதும் மறக்க முடியாது, என்றார்.

ஊக்குவிக்கும் இது குறித்து பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள பதிவில், ''பார்லிமென்ட் மீது கோழைத்தனமான தாக்குதலில் கேடயமாக நின்ற துணிச்சலான பாதுகாப்பு படையினரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறேன். தங்கள் உயிரை பாதுகாப்பு படையினர் தியாகம் செய்தது என்றும் நிலைத்திருக்கும். அவர்களது தியாகம், இந்தியாவின் வலிமையையும், உறுதியையும் ஊக்குவிக்கும்'' என குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் எஸ்ஐஆர் படிவம் சமர்ப்பிக்க டிச.14 வரை அவகாசம் நீட்டிப்பு

புதுடெல்லி, டிச.14-

பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் விண்ணப்பங்களை ஒப்படைக்க தமிழகம், குஜராத் உள்ளிட்ட 5 மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிக்கோபர் யூனியன் பிரதேசத்துக்கு கால அவகாசத்தை நீட்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் டிச.14 வரை படிவத்தை சமர்ப்பிக்கலாம்.



தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்ட திருத்தப்பட்ட கால அட்டவணையின்படி, எஸ்ஐஆர் கணக்கெடுப்புப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி இப்போது தமிழ்நாடு மற்றும் குஜராத்துக்கு டிசம்பர் 14ம் தேதிக்கும், அந்தமான் நிக்கோபர், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கருக்கு டிசம்பர் 18ம் தேதிக்கும், உத்தரப் பிரதேசத்துக்கு டிசம்பர் 26ம் தேதிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதேபோல வரைவு வாக்காளர் பட்டியல் தமிழ்நாடு மற்றும் குஜராத்தில் டிசம்பர் 19 அன்றும், அந்தமான் நிக்கோபர், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் டிசம்பர் 23 அன்றும், உத்தரப் பிரதேசத்தில் டிசம்பர் 31 அன்றும் வெளியிடப்படும்.

ந்த 5 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்துக்கான கணக்கெடுப்புப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு வியாழக்கிழமை (டிசம்பர் 11, 2025) முடிவடையவிருந்தது. மேலும் வரைவு வாக்காளர் பட்டியல்கள் டிசம்பர் 16 அன்று வெளியிடப்படவிருந்தன. இந்த நிலையில் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மேற்கு வங்கத்துக்கான கால அட்டவணையில் எந்த மாற்றமும் அறிவிக்கப்படவில்லை. கேரளாவுக்கான அட்டவணை முன்னரே திருத்தப்பட்டது. கேரள மாநிலத்தில் கணக்கெடுப்புப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி டிச.18 அன்று முடிவடையும், வரைவு வாக்காளர் பட்டியல் டிச.23 அன்று வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கோவா, புதுச்சேரி, லட்சத்தீவு, ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கத்தில் கணக்கெடுப்புப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிமுடிவடைகிறது. வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 23 அன்று வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது

# “வ.உ.சிதம்பரனார் பெயரை சொல்லி திமுக வேஷம் போடுகிறது” வ.உ.சி பேத்தி கண்டனம்

பொள்ளாச்சி, டிச.14-

மாநிலங்களவையில் பேசிய திமுக உறுப்பினர் சிவா, தமிழகத்தைச் சேர்ந்த வ.உ.சிதம்பரனார், சுப்ரமணிய பாரதி, வீரபாண்டிய கட்டபொம்மன் உள்ளிட்ட விடுதலை போராட்ட வீரர்களை வட மாநிலங்களில் உள்ள யாருக்காவது தெரியுமா? அவர்களுக்காக மத்திய அரசு செய்தது என்ன? பள்ளி பாடத்திலாவது இவர்கள் குறித்து கற்பிக்க வேண்டாமா? என தெரிவித்து இருந்தார்.



இது குறித்து பொள்ளாச்சி யில் வசிக்கும் வ.உ.சி.யின் மகன் வழி பேத்தி மரகதம் மீனாட்சி கூறியதாவது: வ.உ.சி. பெயர் வட மாநிலத்தில் இல்லை என எம்.பி. சிவா வருத்தப்பட்டுள்ளார். தமிழகத்தில் திமுக அதிகாரத்தில் உள்ளது.

எத்தனை பல் கலைக்கழகம், நூலகத்துக்கு வ.உ.சி. பெயரை திமுகவினர் வைத்துள்ளனர்? நாடாளுமன்ற வளாகத்தில், சிலை வைக்க வாய்ப்பு கிடைத்த போது, வ.உ.சி.க்கு சிலை வைக்கவில்லை.

முரசொலி மாறனுக்கு சிலை வைத்தனர். முரசொலி மாறன் தியாகம் செய்து, சிறைக்கு சென்று சுதந்திரம் வாங்கி கொடுத்தாரா? சுதந்திரத்துக்காக போராடியவர்கள் பெயர்கள் தெரியாமல் போனதற்கு காந்தியும், நேருவுமே காரணமாகும்.

பிரதமர் மோடி, வந்தேமாதரம் பற்றி பேசும்போது, வ.உ.சிதம்பரம் பிள்ளை கப்பல் ஓட்டினார் என பெருமையாக குறிப்பிட்டு பேசுகிறார். இதை விட என்ன பெருமை வேண்டும்.

காங்கிரசும், தி.மு.க.வும் வ.உ.சி. உள்ளிட்ட பல தலைவர் களையும் முடக்குவதில் மிகவும் அக்கறையோடு செயல்பட்டனர். இப்போது வேஷம் போட்டுக்கொண்டு இருக்கின்றனர். இதற்கு எனது கண்ட னத்தை தெரிவிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் மனு அளித்ததற்கு 56 முன்னாள் நீதிபதிகள் கடும் எதிர்ப்பு





புதுடெல்லி, டிச.14-

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரி மக்களவையில் மனு அளிக்கப்பட்டிருப்பதற்கு 56 முன்னாள் நீதிபதிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த எம்பிக்கள் கடந்த 9ம் தேதி மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை சந்தித்தனர். அப்போது சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று இயற்றப்பட்ட தீர்மான நோட்டீஸை அவரிடம் வழங்கினர். இந்த நோட்டீஸில் 120 எம்பிக்கள் கையெழுத்திட்டு உள்ளனர்.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் 2 முன்னாள் நீதிபதிகள், உயர் நீதிமன்றத்தின் 5 முன்னாள் தலைமை நீதிபதிகள் உட்பட 56 நீதிபதிகள் நேற்று கண்டன அறிக்கையை வெளியிட்டனர். அதில் கூறியிருப்பதாவது:

அச்சுறுத்தும் முயற்சி: கொள்கை, அரசியல் சார்பு இன்றி நீதிபதிகள் பணியாற்றி வருகின்றனர். இந்த சூழலில் உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரி மக்களவையில் தீர்மானம் வழங்கப்பட்டிருப்பதை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இது நீதிபதிகளை அச்சுறுத்தும் முயற்சி ஆகும்.

எதிர்க்கட்சி எம்பிக்கள் தீர்மானத்தில் சுட்டிக் காட்டியிருக்கும் காரணங்கள் திருப்திகரமாக இல்லை. அவசர நிலை காலத்தில் நீதிபதிகள் தண்டிக்கப்பட்டனர்.

உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ரஞ்சன் கோகோய், எஸ்.ஏ.பாப்டே, சந்திரசூட் ஆகியோர் தங்களது பதவிக் காலத்தில் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டனர். தற்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவை இந்திய நீதித் துறை, இந்திய ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் ஆகும்.

அரசியல் நிர்பந்தங்களுக்கு நீதிபதிகளை அடிபணிய வைக்க முயற்சி செய்வது ஜனநாயக விரோத நடவடிக்கை ஆகும். இது, அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது ஆகும். தற்போதைய நிலையில் ஒரு நீதிபதி (ஜி.ஆர்.சுவாமிநாதன்) மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு உள்ளது. நாளை ஒட்டுமொத்த நீதித்துறை மீதும் தாக்குதல் தொடுக்கப்படலாம்.

இந்த நேரத்தில் நாடாளுமன்ற எம்பிக்கள், பார் கவுன்சில்களின் உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஓரணியாக திரண்டு நீதித் துறையை காக்க வேண்டும். இதுபோன்ற பிரச்சினைகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். ஒரு தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். அதை விடுத்து அரசியல்ரீதியாக நீதிபதிகளை அச்சுறுத்தும் வகையில் செயல்படுவதை ஏற்க முடியாது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் ஆதர்ஷ் கோயல், ஹேமந்த் குப்தா, ராஜஸ்தான் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி அனில் தியோ சிங், பாட்னா உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி நரசிம்ம ரெட்டி, கர்நாடக உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி கமல் முகர்ஜி, சிக்கிம் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பெர்மோத் கோலி, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் சுப்பிரமணியன், சிவஞானம், சுதந்திரம் உட்பட 56 நீதிபதிகள் கண்டன அறிக்கையில் கையெழுத்திட்டு உள்ளனர்

# ‘ஈரோட்டில் வரும் 18ல் விஜய் பிரசாரம் உறுதி’ தடையில்லை என்கிறார் செங்கோட்டையன்

ஈரோடு, டிச.14-

''ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே விஜய் பிரசார கூட்டம், வரும் 18ம் தேதி திட்டமிட்டபடி நடக்கும்,'' என த.வெ.க., உயர்மட்ட மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.



தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய், கரூர் சம்பவத்துக்கு பின், மக்கள் சந்திப்பு பயணத்தை மீண்டும் துவங்கி உள்ளார். காஞ்சிபுரம், புதுச்சேரியில் பிரசாரம் செய்த அவர், வரும் 18ம் தேதி, ஈரோட்டில் பயணம் மேற்கொண்டு, பிரசாரம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, ஈரோடு மாவட்டம் பெருந்துறையில், விஜயமங்கலம் டோல்கேட் அருகே, விஜயபுரி அம்மன் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் அனுமதி அளிக்குமாறு காவல்துறையிடம் த.வெ.க.,வினர் கேட்டனர்.

ஆனால், அதற்கு கோவில் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாக தகவல் பரவியது.

இதனால், விஜய் பிரசாரம் நடக்குமா என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில், கூட்டம் நடைபெறும் இடத்தை, முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேற்று பார்வையிட்டார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில், 18ம் தேதி காலை 11 மணி முதல், 1:00 மணிவரை நடைபெறும் பிரசார கூட்டத்தில், த.வெ.க., தலைவர் விஜய் பங்கேற்று பேசுகிறார். இந்த இடத்தில், கூட்டம் நடத்த எந்த தடையும் இல்லை. திட்டமிட்டபடி பிரசார கூட்டம் இங்கு நடக்கும்.

இங்கு கூட்டம் நடத்த எதிர்ப்பு தெரிவித்து, காவல்துறையினரிடம் மட்டுமே, ஹிந்து சமய அறநிலையத்துறையினர் கடிதம் கொடுத்துள்ளனர்.

முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரிடம் எனக்கு எப்படி செல்வாக்கு இருந்ததோ, அதே போலத்தான் த.வெ.க.,விலும் எனக்கு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# 3.38 லட்சம் பெண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டம் விரைவில் தொடக்கம்

சென்னை, டிச.14-

தமிழகத்தில் 3.38 லட்சம் பெண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் கருப்பைவாய் புற்று நோய் தடுப்பூசித் திட்டத்தை முதல்வர் விரைவில் தொடங்கி வைக்கவுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



சென்னையில் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் உலக எய்ட்ஸ் தினம்2025 நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற அமைச்சர் மா.சுப்பிரமணியன், உலக எய்ட்ஸ் தின உறுதிமொழி ஏற்று எச்ஐவிஎய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பதாகைகள், விழிப்புணர்வு குறும்படத்துக்கான குறுந்தகடை வெளியிட்டார்.

மேலும், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, எச்ஐவிஎய்ட்ஸ் தடுப்பு மற்றும் சேவை பணியில் சிறந்து விளங்கிய மருத்துவமனைகள், சிகிச்சை மையங்கள், மருத்துவர்கள், தன்னார்வலர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: இந்த ஆண்டுக்கான கருப்பொருள் ‘இடையூறுகளை கடந்து எச்ஐவிஎய்ட்ஸ் தொடர்பான எதிர்வினைகளை மாற்றுதல்’ ஆகும். 2030க்குள் எச்ஐவிஎய்ட்ஸ் பாதிப்பு இல்லாத தமிழகத்தை உருவாக்க பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக தமிழகத்தில் தொற்றின் தாக்கம் மிகவும் குறைந்துள்ளது. இந்தியாவின் எச்ஐவி பாதிப்பு 0.23 சதவீதமாக இருக்கும் நிலையில், தமிழகத்தில் 0.16 சதவீதமாக உள்ளது.

தமிழகம்தான் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக 100 சதவீதம் கருவுற்ற தாய்மார்களுக்கு எச்ஐவி மற்றும் சிபிலிஸ் பரிசோதனைகள் செய்கிறது.

தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி மற்றும் மருத்துவ செலவுகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை என 7,618 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அடுத்த மாதம் தொடக்கம்: தமிழகத்தில் அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பள்ளிகளில் படிக்கும் 9 வயது முதல் 14 வயதுள்ள பெண் குழந்தைகளுக்கு கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு வராமல் தடுக்க தடுப்பூசி போடும் திட்டத்தை அடுத்த மாதம் முதல்வர் தொடங்கி வைக்கவுள்ளார்.

இத்திட்டத்தில் 3.38 லட்சம் பெண் குழந்தைகள் பயன்பெறுவார்கள். முதல் தவணையாக அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. இந்தியாவிலேயே தமிழகம் தான் முதல்முறையாக இந்த திட்டத்தை தொடங்குகிறது. இந்தியா முழுவதும் இந்த திட்டத்தை மத்தியஅரசு, கொண்டு வந்தால், ஒட்டுமொத்த பெண் குழந்தைகளும் பலன் பெறுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சிமேயர் ஆர்.பிரியா, சுகாதாரத் துறை செயலர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க திட்ட இயக்குநர் ஆர்.சீதாலட்சுமி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் சோமசுந்தரம், கூடுதல் இயக்குநர் திலகம் உள்ளிட்டோர் இந் நிகழ்வில் பங்கேற்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000